பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 16 வியாழக்கிழமை 02.10.2025 | அதிர்வு 63

## ஓட்டோ சாரதி ஒருவர் துப்பாக்கியுடன் கைது!



துப்பாக்கியுடன் ஓட்டோ சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மஹிந்தவின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி நெவில் அதிரடியாகக் கைது!

## ஒக்டோபர் 17 ஆம் திகதி வரை விளக்கமறியல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெவில் வன்னியாராச்சி வாக்கு மூலம் வழங்குவதற்காக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் இன்று முற்பகல் முன்னிலையாகிய போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

02

## யானை தாக்கி குடும்பஸ்தர் பரிதாபப் பலி!



காட்டு யானை தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தளம், ஆனமடு, சியம்பலாகஸ்வெவ பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

02

## பாரவூர்தி கால்வாயில் கவிழ்ந்து சாரதி சாவு!



கழிவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் பாரவூர்தியின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

02

# மட்டு. பாலமீன்மடு விக்னேஸ்வராவில் அதிபரை இடமாற்றுமாறு ஆர்ப்பாட்டம்!






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபரை இடம்மாற்றுமாறும் கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி இன்று வியாழக்கிழமை (02) பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை முன் கதவைப் பூட்டி எவரையும் உட்செல்ல விடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலையில் தரம் 11 இல் கற்பித்துவந்த ஆசிரியர் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்டார். அதேவேளை, அதிபருக்கு ஆதரவாக இருக்கும் சிலரால் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியருக்கு எதிராகக் குற்றச்சாட்டு சுமத்தி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அவர் கடந்த 4 தினங்களுக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை. க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு இன்னும் 4 மாதங்கள் மட்டுமே இருக்கின்றன. இது தொடர்பாக அதிபர் மற்றும் வலயக் கல்வி பணிமனையின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் இதுவரை ஒரு தீர்வும் இல்லை.

இந்த நிலையில் பாடசாலை அதிபரை இடமாற்றுமாறு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் வலய கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக முறைப்பாடுகள் செய்திருந்தனர். இதற்கு இதுவரை தீர்வும் கிடைக்கவில்லை. எனவே எங்களுக்கு உடனடியாக அதிபரை இடமாற்றம் செய்து குறித்த பாடங்களுக்கான ஆசிரியர்களை வலயக் கல்வி பணிப்பாளர் நியமித்து தரும் வரைக்கும் பாடசாலை கதவை திறக்க முடியாது என மாணவர்கள் சுலோகங்கள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து போராட்ட இடத்துக்குத் தேசிய மக்கள் சக்தி மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு விஜயம் செய்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது அங்கு சிற்றுண்டிச்சாலை நடத்திவரும் பெண் ஒருவர், தான் கடந்த 7 வருடங்களாக அங்கு சிற்றுண்டிச்சாலை நடத்தி வருகிறார் என்றும் குறித்த அதிபர் என்னிடம் ஒரு மாணவருக்கு 5 ரூபா வீதம் மாதம் 15 ஆயிரம் ரூபா தருமாறு கோரி நான் 35 ஆயிரம் ரூபா கொடுத்தேன் அதற்கு நன்கொடை என ஒரு பற்று சீட்டில் எனது பெயரும் மற்ற பற்றுச்சீட்டு எனது சகோதரியின் பெயர் இட்டு தந்துள்ளார்.

கடந்த 5 ஆம் மாதம், 10 ஆம் 11 ஆம் ஆண்டு மாணவர்களிடம் 62 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று ஒரு ஆசிரியருக்கும் தெரியாமல் தருமாறு கேரிய நிலையில் அதனை அவரிடம் கொண்டு சென்று கொடுத்தேன். அப்போது அதிபர் என்னிடம் யாரிடம் பறையடித்தனி எனக் கேட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டார். அது எனக்கு மிகவும் கவலை எனவும் தெரிவித்தார்.

உடனடியாக சம்மந்தப்பட்ட வலயக் கல்வி பணிப்பாளரின் கதைப்பதுடன் இங்கு நடந்துள்ளவை தொடர்பாக குழு ஒன்றை அமைத்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்று தேசிய மக்கள் சக்தி மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி அங்கு சென்று மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, அதிபர் தொடர்பாக கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளார் என்றும் அங்கிருந்து பதில் வரும்வரை அவர் இன்று தொடக்கம் வலயக் கல்வி அலுவலகத்துக்குத் தற்காலிகமாக மாற்றப்படுவார் என்றும் உத்தரவாதம் அளித்தார். இதனை அடுத்து மாணவர்கள் கதவைத் திறந்து உட்செல்ல அனுமதித்தனர்.

இதையடுத்து கல்விப் பணிப்பாளர் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களை பாடசாலை மண்டபத்துக்கு அழைத்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஓட்டோ சாரதி...

கண்டி – மெனிக்ஹின்ன பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

மெனிக்ஹின்ன பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மெனிக்ஹின்ன பகுதியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டது எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாகத் துப்பாக்கியை வைத்திருந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மெனிக்ஹின்ன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பாரவூர்தி...

இந்தச் சம்பவம் இரத்தினபுரியில் இடம்பெற்றுள்ளது.

51 வயதுடைய நபரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் பழைய கட்டடங்களை இடிப்பது உட்பட பல்வேறு வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இன்று அதிகாலை வேளை வீட்டு முற்றத்தில் இருந்து பாரவூர்தியை பின்னோக்கிச் செலுத்தும் போது, பாரவூர்தி திடீரெனக் கவிழ்ந்து அருகில் உள்ள கால்வாயில் வீழ்ந்ததால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### யானை தாக்கி...

உயிரிழந்தவர் ஆனமடு, சியம்பலாகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவர் இன்று காலை 6.30 மணியளவில் தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்றுக்கொண்டிருக்கும் போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### மஹிந்தவின்...

சட்டவிரோத சொத்துச் சேர்ப்பு தொடர்பான விசாரணை தொடர்பில் நெவில் வன்னியாராச்சி கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட 4 கிலோ தங்கம் சிக்கியது!

## இரண்டு சந்தேகநபர்களும் கைது

(எம்.எச்.எம். சியாஜ்)

கற்பிட்டி களப்பின் அரிச்சல் கடல் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, சுமார் 4 கிலோ 454 கிராம் தங்கத்தைக் கடத்த முயன்ற இரண்டு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ள கடற்படையினர், ஒரு டிங்கி படகையும் கைப்பற்றியுள்ளனர்.



கடல் வழியாக கடத்தல் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க, தீவைச் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் கடற்பரப்பை உள்ளடக்கிய வகையில் கடற்படை வழக்கமான ரோந்து மற்றும் தேடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி, வடமேற்கு கடற்படை கட்டளைக்குக் கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நேற்று புதன்கிழமை காலை கற்பிட்டி களப்பின் அரிச்சல் கடல் பகுதியில் இலங்கைக் கடற்படை கப்பல் விஜய நிறுவனம் நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின் போது, குறிப்பிட்ட கடல் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த ஒரு சந்தேகத்துக்கிடமான ஒரு டிங்கிப் படகைச் சோதனை செய்தனர். அந்த டிங்கியின் மீன்பிடி வலையில் 13 சந்தேகத்துக்கிடமான ஈய எடைகள் காணப்பட்டன. அங்கு மேற்கொண்ட சோதனையின் போது, நுணுக்கமாகத் தயாரிக்கப்பட்டு ஈய எடைகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த சட்டவிரோதமாகக் கொண்டு செல்ல முயற்சித்த சுமார் 4 கிலோகிராம் 454 கிராம் தங்கம் மற்றும் ஒரு டிங்கிப் படகு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைதான இரண்டு சந்தேகநபர்களும் கற்பிட்டி மற்றும் ஆனவாசல் பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள், தங்கம் மற்றும் டிங்கிப் படகுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழகத்தின் பொன்விழா




ஈழத் தமிழர்களின் தனிப்பெரும் அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொன்விழா எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இலங்கை பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணம் வளாகமாக 1974 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட உயர்கல்வி நிலையம், இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமாக வியாபித்து நிற்கின்றது.

ஐம்பதாவது ஆண்டைக் கடந்திருக்கும் இந்தப் பல்கலைக்கழகத்தின் பன்னிரண்டு பீடங்களும் இணைந்து பொன் விழா நிகழ்வை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

பல்கலைக்கழகத்தின் பொன் அகவையையொட்டி, இராமநாதன் மண்டபத்தையொட்டி விரிவாக்கம் செய்யப்பட்ட "கூடல் அவை" எனும் சபா மண்டபம் சம்பிரதாய பூர்வமாக சமய அனுட்டானங்களுடன் அன்று காலை 6.30 மணியளவில் – சுப நேரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ள பொன் விழா நிகழ்வுக்கு இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல். வசந்தகுமார ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் ஐம்பது வருட காலக் கல்விப் பணி வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் அமைந்த வரலாற்றுப் பொக்கிஷமான "யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பொன் அகவை வரலாறு" எனும் நூலும், பல்கலைக்கழகத்தின் பொன் அகவையை நினைவுகூரும் வகையிலான நினைவு முத்திரை வெளியீடும் இடம்பெறவுள்ளது." – என்றுள்ளது.



# இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல்

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.



மகளிர் விவகார அமைச்சு, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், தொழிற்றுறை திணைக்களம் என ஒவ்வொரு திணைக்களத்தினதும் திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக ஆராயப்பட்டன. திட்டங்களை முன்னெடுப்பதிலுள்ள இடர்பாடுகள் மற்றும் அதற்குத் தீர்வுகள் என்பனவும் வழங்கப்பட்டன.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், பிரதிப் பிரதம செயலாளர் – நிதி, கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர், தொழிற்றுறை திணைக்களத்தின் பணிப்பாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தினதும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.












# அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(எஸ்.எம்.அறூஸ்)

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவின் ஒருங்கிணைப்பிலும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சருமான வசந்த பியதிஸ்ஸ தலைமையில் மாவட்ட செயலக ஏ.ஐ.விக்ரம கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுல ரத்நாயக்க, எம்.எஸ்.உதுமாலெப்பை, ஏ.ஆதம்பாவா, அஷ்ரப் தாஹிர், எம்.எஸ்.அப்துல் வாசித், முத்து ரத்தத்த, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் தலங்கம உள்ளிட்ட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இங்கு அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் முக்கிய வேலைத்திட்டங்களான கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம், கிராமிய வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டம், டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டம் தொடர்பான முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்ட செயலகம் ஊடாகச் செயற்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள் மற்றும் வேறு ஸ்தாபனங்கள் ஊடாகச் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

தொடர்ந்தும் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி, காணி, வீதி அபிவிருத்தி, திண்மக் கழிவகற்றல், குடிநீர் திட்டம், விளையாட்டு போன்ற பல விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன் உரிய அதிகாரிகள் இந்த விடயங்களில் அதீக அக்கறையுடன் பணியாற்றுமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

அத்தோடு, தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆராய இங்கு தீர்மானிக்கப்பட்டதுடன், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை அவ்வாறான கூட்டங்களில் எடுக்குமாறும் அதிகாரிகள் வலியுறுத்தப்பட்டனர்.

கொழும்பு – அம்பாறை இடையில் உள்ளக வான் போக்குவரத்துச் சேவை ஒன்றை ஆரம்பித்தல், நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை மக்களுக்குக் கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கல்முனை பிரதேசத்தில் ரயில் டிக்கெட் வசதிகளை நிறுவுதல், மாவட்டத்தின் பல்வேறுபட்ட இடங்களில் யானை வேலிகளை விரைவாக அமைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.






# இசைத்துறைத் தலைவர் ரெபேர்ட் புதிய பீடாதிபதியாகத் தெரிவு!



சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைகள் பீடத்தின் பீடாதிபதியாக இசைத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான த.ரெபேர்ட் அருட்சேகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பீடாதிபதி எஸ். சிவரூபனின் பதவிக்காலம் நிறைவுக்கு வருவதைத் தொடர்ந்து, புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான பீடச்சபைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இடம்பெற்ற தேர்தலில் தற்போதைய இசைத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான த.ரெபேர்ட் அருட்சேகரம் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனடிப்படையில் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு த.ரெபேர்ட் அருட்சேகரம் பீடாதிபதியாகச் செயற்படுவார்.



# சிறுவர் தினத்தை முன்னிட்டு மரநடுகை வேலைத் திட்டம்!

**(தில்சாத் பர்வீஸ்)**

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, “உலகை வழிநடத்த அன்பால் போசியுங்கள்” என்ற தொனிப்பொருளின் கீழ் சுற்றாடல் மற்றும் மரநடுகை வேலைத் திட்டம் நேற்று (01) புதன்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிவில் பாதுகாப்பு குழுவின் அமைப்பாளர் எம். வை.மஃறுப் தலைமையில் சம்மாந்துறை அல் – முனீர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை அல் – முனீர் வித்தியாலயம் சுற்றுப்புறத்தை பசுமையாக்கும் நோக்கில், மரநடுகை நிகழ்வும், உலக சிறுவர் தினத்தின் முக்கியத்துவங்கள், போதைவஸ்து பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் சம்பந்தமாக விழிப்புணர்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபர் கலந்து கொண்டார். சம்மாந்துறை அல் – முனீர் வித்தியாலயத்தின் அதிபர் ஏ.அப்துல் றஹீம், பிரதி அதிபர் எம். சீ.முபாறக் அலி, உதவி அதிபர்களான எம்.ஏ.சீ.ஹனீறா, ஏ.எஸ்.ஏ.ஹஸ்பீயா, சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என். றிபாய்டீன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் வி.எம். முஹம்மட், பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சிறுவர் தின நிகழ்வு ஆண்டிமுனையில்

**(உடப்பு க.மகாதேவன்)**

ஆண்டிமுனையில் அமைந்துள்ள ஆதவன் பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று (01) காலை இடம்பெற்றது. ஆசிரியைகள் திருமதி கிருஷ்ணகாந்தி, திருமதி ஜனனி ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு, மாணவர்களுக்கு உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறை நெருக்கடி

போதைப் பொருள் பாவனையும் அதனைக் கட்டுப்படுத்துவதும் நாட்டில் மிக நெருக்கடியான விவகாரமாக மாறி வருகின்றது என்று சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாளும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒருபுறம் போதைப் பொருள் கடத்தல்காரர்கள், வர்த்தகர்கள், பாவனையாளர்கள் போன்றோருக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டாலும், மறுபுறம் இத்தகைய போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களை அதிலிருந்து மீட்டெடுத்து மேம்படுத்துவதற்கான மறுவாழ்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் நாடு திண்டாடுகிறது.

ஏற்கனவே அளவுக்கு மீறி நிரம்பி வழியும் சிறைச்சாலைகளில் போதை பொருள் பாவனை தொடர்பாக கைதாகி தடுத்து வைக்கப்பட்டோர் எண்ணிக்கை எல்லை மீறி வருகின்றது.

2025 ஆம் ஆண்டில் மட்டும் பொலிஸார் ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 785 சோதனைகளை நடத்தி, 17 ஆயிரத்து 647 கிலோ போதைப் பொருள்களையும், 35 லட்சத்துக்கும் அதிகமான போதை மாத்திரைகளையும் பறிமுதல் செய்திருக்கின்றனர். இந்த நடவடிக்கைகளை ஒட்டி ஒரு லட்சத்து 64 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களில் ஹெராயின், கஞ்சா, மெத்தம்பேட்டமைன், ஹாஷிஷ், கொகோயின் மற்றும் அதிக அளவில் மருந்துகள் ஆகியவை அடங்கும். இது, நாட்டில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டின் அளவை பிரதிபலிக்கிறது.

நாட்டிலுள்ள மொத்தம் 36 சிறைகளில் எண்ணிக்கை ரீதியின் படி ஆக 12 ஆயிரம் பேரையே தடுத்து வைக்க முடியும். அதற்கான வசதிகளே சட்டபூர்வமாக அங்கு இருக்கின்றன. ஆனால் தற்போது நாடு முழுவதும் 36 சிறைகளிலும் மொத்தம் 34 ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதாவது மேலதிகமாக இரண்டு மடங்கு தொகையினர் சிறைக்குள் தள்ளப்பட்டு நெருக்கடிக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு அதிகப்படியான நெரிசல் உயிருக்கு ஆபத்தான நிலைமைகளை உருவாக்கியுள்ளது. அத்தோடு கைதிகளின் போதைப் பழக்கத்தை நிவர்த்தி செய்வதற்கும் மீண்டும் மீண்டும் குற்றம் சாட்டப்படுவதைத் தடுப்பதற்கும் அவசியமான மறுவாழ்வு செயல்முறைகளை இந்த நெருக்கடி குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது.

சிறைச்சாலைக் கைதிகளின் எண்ணிக்கையில் சுமார் அறுபது வீதமானோர்ர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்டவர்கள். சிறைவாசம், விடுதலை, மீண்டும் சமூக வாழ்வு, திரும்பவும் போதைப் பொருள் பாவனை, மீண்டும் கைது என்ற தீய சுழற்சியில் சிக்கியுள்ள பல கைதிகள் போதைக்கு நிரந்தரமாக அடிமையானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலைகளில் உள்ள பல கைதிகள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்து வருகின்றனர். இது இத்தகையோருக்கான மேம்பட்ட மறுவாழ்வு திட்டங்கள் அவசியமானவை என்பதை உணர்த்துகின்றது. போதைப்பொருள் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் பயனுள்ள மறுவாழ்வை வழங்க அதிகாரிகள் போராடி வருகின்றனர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

நாட்டில் கண்டக்காடு, சேனபுர மற்றும் வவுனியாவில் மூன்று மையங்களில் புனர்வாழ்வுப் பணியகங்கள் இயங்கினாலும் அங்கும் நெருக்கடி காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

போதைப்பொருள் துஷ்பிரயோகத்தில் மூழ்கியவர்களை மீட்டெடுப்பதில்தான் நாட்டின் மீட்சி தங்கியுள்ளது.





# ஒரு இலட்சத்து ஆயிரத்து 762 ஏக்கர் நிலங்களை வன்னியில் மக்களுக்காக விடுவிக்க நடவடிக்கை

## சுற்றுச்சூழல் அமைச்சர் தகவல்

(கி.வசந்தன்)

வன்னி மாவட்டத்தில் ஒரு இலட்சத்து ஆயிரத்து 762 ஏக்கர் நிலங்களை மக்களுக்காக விடுவிக்க இருக்கின்றோம் என்று சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி தெரிவித்தார்,

வவுனியா மதுரா நகர் பகுதியில் தாவரவியல் பூங்கா மற்றும் வன்னி விளாங்குளம் பகுதியில் எக்கோ பூங்கா என்பவற்றை அமைப்பது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடனான கலந்துரையாடல் வவுனியா மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இரண்டு இடங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்காக வருகை தந்தோம். ஈரப்பெரியகுளம், மதுரா நகர் என்ற இடத்தில் தாவரவியல் பூங்கா ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்த இடத்தில் சிறுகைத்தொழில், குடிசைக் கைத்தொழில் மற்றும் உல்லாசப் பயணத்துறையை ஊக்குவிக்கும் முகமாக ஆரம்ப கட்ட நடவடிகாகைகளை மேற்கொள்ள வருகை தந்தோம்.

இந்தப் பிரதேசத்தில் 20 ஹெக்ரெயர் அளவில் இந்தத் தாவரவியல் பூங்கா அமைய இருக்கிறது.

அத்துடன் வன்னிவிளாங்குளம் பாதுகாப்பு வனப் பகுதியில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் பூங்கா ஒன்றை யால வில்பத்து போன்று சுற்றுலா பயணிகளை கவரக் கூடியதாகவும் ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடியதாகவும் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எங்களுடைய அரசு கடந்த ஜூலை மாதம் 5 ஆம் திகதி வனப் பாதுகாப்பு இடங்களாகக் கிட்டத்தட்ட 30 இடங்களை அடையாளம் கண்டு அதனைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

குறிப்பாக 30 வருட கால யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வும், அதன் பின்னரான காலத்தில் தங்களது இடங்களுக்கு மக்கள் மீள்குடியேறியும் இருந்தனர். இந்நிலையில் கடந்த கால அரசுகள் ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் மூலமாக வடக்கு, கிழக்கு பகுதிகளிலே அளவீடுகளை மேற்கொண்டிருந்தனர். இவ்வாறு அளவீடு மேற்கொள்ளும் போது மீள்குடியேறிய மக்களின் வாழ்விடங்கள், விவசாய நிலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரச நிலங்கள் என்பனவும் வனப் பிரதேசங்களுக்கு உள்வாங்கும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக இங்கே பாரிய ஒரு காணிப் பிரச்சனை காணப்பட்டது. இதன் காரணமாக குறித்த திட்டம் இங்கே நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது.

நாம் பொறுப்புள்ள அரசு என்ற வகையிலே இதற்கான உரிய தீர்மானங்களை மேற்கொண்டு வன்னி நிலப்பரப்பிலே ஒரு இலட்சத்து ஆயிரத்து 762 ஏக்கர் நிலங்களை மக்களுக்காக விடுவிக்க இருக்கின்றோம். அதில் வவுனியா மாவட்டத்தில் 22 ஆயிரத்து 804 ஏக்கர் நிலங்களும், மன்னார் மாவட்டத்தில் 17 ஆயிரத்து 882 ஏக்கர் நிலங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 48 ஆயிரத்து 532 ஏக்கர் நிலங்களையும் விடுவிக்க இருக்கின்றோம்." - என்றார்.

இந்தக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் அன்ரன் ஜெயக்கொடி, உபாலி சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், மாவட்ட செயலாளர் சரத் சந்திர உட்பட பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.












# மாணவியருக்கு பாதுகாப்பளித்த பிரதி அதிபர் மீது அதற்காக இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல்!

## அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் சம்பவம்

**(வடிவேல் டினேஸ்)**

மாணவியருக்கு பாதுகாப்பளித்த பிரதி அதிபர் மீது அதற்காக இனந்தெரியாத குழு ஒன்று தாக்குதல் நடத்தியிருக்கின்றது.

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையின் சரஸ்வதி பூஜையை முன்னிட்டு சரஸ்வதி பூஜை ஊர்வலம் நேற்றுக் காலை இடம் பெற்றது.

ஊர்வலம் வீதி வழியாக சென்று கொண்டிருக்கும் வேளையில் அத்துமீறி மாணவிகளை படம் எடுக்க ஒரு குழுவினர் முற்பட்ட வேளை ஊர்வலத்துடன் சென்ற பாடசாலையின் பிரதி அதிபர் அதனைத் தடுத்துள்ளார். அதே வேளை மாணவியரும் அந்த செயற்பாட்டைத் தடுத்துள்ளனர்.

இதனை தொடர்ந்து ஊர்வலம் உள்ளிட்ட பாடசாலை செயற்பாடுகள் நிறைவு பெற்றதன் பிற்பாடு பிரசாதம் உள்ளிட்ட பொருள்களை எடுத்துக் கொண்டு பிரதி அதிபர் தனது வீட்டிற்குச் சென்றுள்ளார்.

பிரதி அதிபர் வீட்டிற்குச் சென்ற இனம் தெரியாத குழுவினரால் பிரசாதம் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் தூக்கி எறியப்பட்டு, பிரதி அதிபர் அந்தக் குழுவினரால் தாக்கப்பட்டு, அவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளளார் என்ச்ப் பாடசாலை அதிபர் ஜே.ஆர். டேவிட் அமிர்தலிங்கம் தொரிவித்தார்.

அத்துடன் பிரதி அதிபர் தாக்கப்பட்டமை தொடர்பில் தமது பாடசாலைத் தரப்பினர் இன்று காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர் எனவும், இது தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு அளித்துள்ளனர் எனவும், தாக்குதல் நடத்திய குழுவினரை கைது செய்ய பொலிஸார் இரண்டு நாள் அவகாசம் கேட்டுள்ளனர் எனவும் அதிபர் மேலும் தொரிவித்தார்.









# யாழில் காந்தி ஜயந்தி நிகழ்வு

மகாத்மா காந்தியின் 156 ஆவது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் இன்று காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது யாழ்ப் பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரி யாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத்தூதர் சாய் முரளி , வடமாகாண பிரதம செயலாளர் மு.தனுஜா, யாழ்ப்பாண மாவட்ட செயலா ளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ் மாநகர பிரதி முதல்வர் இ.தயாளன், யாழ் மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந் திரன் மற்றும் சமய, சமூக பிரதிநிதிகள், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது காந்தீயம் ஏடு வெளி யிட்டு வைக்கப்பட்டு அதன் பிரதி அனை வருக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை இந்திய துணைத் தூத ரக அதிகாரிகளால் துவிச்சக்கர வண்டி பவனியொன்றும் மேற்கொள்ளப்பட் டது.





















# சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் மானம்பூ

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் மானம்பூ உற்சவம் இன்று காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்த மண்டபபூசை நடைபெற்றது.

அதனை தொடர்ந்து விநாயக பெருமான் குதிரை வாகனத்தில் வெளி வீதி எழுந்தருளி மானம்பூ உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது.

இவ் மானம்பூ உற்சவத்தில் விநாயக அடியவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு விநாயகர் அருள் பெற்றதனர்.











# நல்லூர் மானம்பூ நிகழ்வு





வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் விஜயதசமி நாளான இன்று காலை மானம்பூ உற்சவம் இடம்பெற்றது.

காலை 6.45 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று, குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி வெளிவீதி உலாவந்ததுடன் மானம்பூ உற்சவம் சிறப்பாக இடம் பெற்றது.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு முருக பெருமானின் அருட்காட்சியை கண்டு களித்தனர்.






# பொத்துவில் கொட்டுக்கல்லில் மீனவ இறங்குதுறை திறப்பு!

(எஸ்.எம்.அறூஸ்)

அம்பாறை, பொத்துவில் கொட்டுக்கல் மீனவர்களின் நலன் கருதி மாவட்ட மீனவ பேரவை மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முன்னெடுப்பில் புனரமைக்கப்பட்ட மீனவ இறங்குதுறை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட மீனவ பேரவையின் இணைப்பாளர் கே.இஸ்ஸதீனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் வாசீத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கௌரவ அதிதிகளாக பொத்துவில் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் ஜே.மாபீர், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார, எச்.ஐ.நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் மஞ்சுல, பிரதேச சபை உறுப்பினர் ஏ.டபிள்யூ.எம்.றில்வான், கடற்றொழில் பரிசோதகர் எம்.டி.எம். ஜகுபர் உள்ளிட்ட திட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள், மீனவ அமைப்பின் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சுமார் 13 இலட்சம் ரூபா நிதியில் புனரமைக்கப்பட்ட மீனவ இறங்குதுறை மூலம் மீனவர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிய வந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதுடன், உல்லாசப் பயணத்துறைக்கும் பயன்படும் வகையிலும் இந்த இறங்குதுறை காணப்படுகின்றது.

புனரமைக்கப்பட்ட இறங்குதுறையை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். அப்துல் வாசித் மற்றும் அதிதிகளினால் திறந்து வைக்கப்பட்டதுடன் இறங்குறை வளாகத்தில் பயன்தரும் தென்னை மரங்களும் நடப்பட்டமை விசேட அம்சமாகும்.

மீனவர்கள் தங்களது மீன்பிடிப்படகுகளை சரியான முறையில் தரித்து வைப்பதற்கும், அதனைப் பராமரிப்பதற்கும் போதுமான வசதிகள் இன்றி சிரமப்பட்டு வந்த நிலையில் மாவட்ட மீனவ பேரவை மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் இதனைக் கவனத்தில் கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சில நிதி அமைப்புகளின் ஊடாக நிதியைப் பெற்று இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.

பெரும்பாலான மீனவர்கள் பங்கேற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகள் பலரும் உரையாற்றினர்.

மாவட்ட மீனவ பேரவை ஊடாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் மீனவர்களினதும், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களினதும் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காகப் பல வேலைத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.














# மகாத்மா காந்தியடிகளின் 156 ஆவது ஜெயந்தி தினம்

## மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இன்று



மட்டக்களப்பு காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியடிகளின் 156 ஆவது ஜெயந்தி தினம் இன்று (02) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் சங்கத்தின் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் அதிகாரபூர்வ ஏடான காந்தீயம் இதழினை மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் இதழாசிரியருமான எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி வெளியிட்டு வைக்க முதல் பிரதியை மாநகர முதல்வர் பெற்றுக் கொண்டார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாநகர சுகாதார தொழிலாளர்களின் பிள்ளைகள் இந்த நிகழ்வில் சிறப்புப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

காந்திய அன்பர்களும் பொது மக்களும் அடிகளாரின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

சங்கத்தின் செயலாளர் கதிர் பாரதிதாசன் உட்பட சங்கத்தின் நிர்வாகிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# சிறுவர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி!






(றிஸ்வான் சாலிஹூ)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ. எம். எம். அன்சாரின் வழிகாட்டலின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலக பெண்கள், சிறுவர் அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சிறுவர் கழக அங்கத்தவர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி நேற்று புதன்கிழமை (01) அக்கரைப்பற்று பெபில்ஸ் அக்டமி நீச்சல் தடாகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் வை.ராசித், பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெபில்ஸ் அக்டமியின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலக நிர்வாக பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எச். ஜெய்னுடீனால் சிறுவர்களுக்கு இலவச நீச்சல் பயிற்சி வழங்கப்பட்டதோடு, இதில் பங்குபற்றிய சிறுவர் கழக அங்கத்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



# மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் ஒருவர் மரணம்; இருவர் கைது!

(தில்சாத் பர்வீஸ்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் சிகிச்சை பலனின்றி ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றைய இருவரும் கைது செய்யப்பட்டு காயம் அடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை அம்பாறை பிரதான வீதியில் அமைந் துள்ள குவாசி நீதிமன்றத்துக்கு முன் னால் கடந்த (29) திங்கட்கிழமை மாலை வேளையில் நடைபெற்ற வாகன விபத் தில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்த சம்மாந்துறை சேர்ந்த உதுமாலெப்பை முகம்மட் அன்பர் (வயது 61) என்பவரே இன்று (02) வியாழக் கிழமை உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதி உட்பட்ட இருவர் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்-ஜவாஹிர் விசாரணைகளை மேற் கொண்டு வருகிறார்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களைச் சம்மாந்துறை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.




# முத்து நகர் விவசாயிகளது போராட்டம் 16 ஆம் நாளாக இன்றும் தொடர்கிறது!

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை முத்து நகர் விவ சாயிகள் 16 ஆம் நாளாக இன்றும் (02) திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக சத்யாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அபகரிக்கப்பட்ட விவசாய நிலங் களைப் பெற்றுத்தரக் கோரியே குறித்த விவசாயிகள் போராடி வருகின்றனர்.

பிரதமர் அலுவலகம் முன்பாகப் போராடியபோது பத்து நாள்களுக்குள் தீர்வு வழங்குவதாகக் கூறிய நிலையில் தற்போது பிரதமரின் பதிலுக்கு இன்னும் 02 நாள்களே உள்ளது. இதற்கான தீர்வை விரைந்து வழங்குமாறு கோரு கின்றனர்.



# மலேசியாவில் ஆசியான் உச்சி மாநாடு: மோடி - ட்ரம்ப் சந்தித்து பேச வாய்ப்பு



மலேசியாவில் ஒக்டோபர் 26 மற்றும் 27 ஆகிய திகதிகளில் ஆசியான் உச்சி மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டின் போது பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் சந்தித்து பேச வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

47 ஆவது ஆசியான் உச்சி மாநாடு மலேசியாவில் நடைபெற உள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க வாய்ப்பு உள்ளதாக தகவல். அதே நேரத்தில் இந்த நிகழ்வில் பங்கேற்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு மலேசியா அழைப்பு விடுத்துள்ளது. அதை இந்த நிகழ்வின் போது பிரதமர் மோடி மற்றும் ட்ரம்ப் சந்தித்து பேச வாய்ப்பு உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய பொருள்களுக்கு அமெரிக்கா 50 சதவீதம் இறக்குமதி வரி விதித்துள்ளது. இந்த வரி விதிப்பு நடைமுறைக்கு அமலுக்கு வந்த பிறகு இரு நாட்டு தலைவர்களின் முதல் சந்திப்பாக ஆசியான் மாநாடு அமைய வாய்ப்புள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக 2 ஆவது முறையாக பொறுப்பேற்ற டொனால்ட் ட்ரம்ப், இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் தங்கள் நாட்டு பொருள்களுக்கு அதிக வரி விதிப்பதாக குற்றம் சாட்டினார். இதையடுத்து, உலக நாடுகள் விதிக்கும் வரிக்கு ஏற்ப பதில் வரி விதிக்கப்படும் என்று கூறிய அவர், அதற்கான பட்டியலை வெளியிட்டார்.

இதற்கு 90 நாள் காலக்கெடு அறிவித்தார். காலக்கெடு முடிந்ததும், உலக நாடுகள் மீதான வரி விதிப்பு அமுலுக்கு வந்தது. இந்தியா - அமெரிக்கா இடையே இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்துவது தொடர்பாக 5 சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால், அமெரிக்காவின் மரபணு மாற்றப்பட்ட வேளாண் விளைபொருள்கள், பால் பொருள்களுக்கான சந்தையை திறக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை இந்தியா ஏற்கவில்லை. இதனால், உடன்பாடு ஏற்படுவதில் தாமதம் ஏற்பட்டது.

இதற்கிடையே, இந்திய பொருள்கள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 25 வீத வரி விதித்தார். இது ஓகஸ்ட் 7 ஆம் திகதி அமுலுக்கு வந்தது. அத்துடன், ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதாக கூறி கூடுதலாக 25 வீதம் வரி விதித்தார். இது ஓகஸ்ட் 27 ஆம் திகதி அமுலுக்கு வந்தது. இதன்மூலம், இந்திய பொருள்கள் மீது 50 வீத வரி விதிக்கப்பட்டுள்ளது. இது, இந்திய தொழில் துறைக்கு பெரும் பின்னடைவு ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# செந்தில் பாலாஜியின் பதற்றம் சந்தேகத்தை எழுப்புகின்றது

## அண்ணாமலை தெரிவிப்பு



நீதிமன்றமும், விசாரணை ஆணையமும் விசாரணை நடத்திக் கொண்டிருக்கையில், செந்தில் பாலாஜி இத்தனை பதட்டப்படுவதுதான் பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது என முன்னாள் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

"கரூர் த.வெ.க. பொதுக்கூட்டத்தில், கூட்ட நெரிசலில் சிக்கி, பொதுமக்கள் உயிரிழந்தது குறித்து, தேசிய ஜனநாயக கூட்டணியின் எம்பிக்கள் குழு, பாதிக்கப்பட்ட பொதுமக்களைச் சந்தித்து, இந்த துயர நிகழ்வு தொடர்பான விசாரணை, பதவியிலிருக்கும் உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் நடைபெற, பரிந்துரைத்துள்ளது.

இந்த நிலையில் இன்று ஊடகங்களைச் சந்தித்த கரூர் திமுக சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் சாராய அமைச்சருமான செந்தில் பாலாஜி, புதிய கதைகளைக் கூறியுள்ளார். த.வெ.க சார்பில், சி.பி.ஐ. விசாரணை கோரிய வழக்கு, வரும் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரவிருக்கிறது. கூட்டத்தில்,விஜய் மீது செருப்பு வீசு உள்ளிட்ட அசம்பா விதங்களுக்கான ஆதாரங்கள் இருப்ப தாக த.வெ.கவினர் தெரிவித்துள்ளனர். விசாரணையின்போது த.வெ.க. வழக்கறிஞர்கள் சமர்ப்பிக்கும் ஆதாரங்களை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும் நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியது.

மேலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் உண்மை அறியும் குழுவிடம் பெண்மணி ஒருவர், கூட்டத்தில் கத்திக்குத்து நடந்ததாகக் கூறியிருக்கிறார். இப்படி பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கையில், இவர் இப்போது ஊடகச் சந்திப்பு நடத்தி, அவை எல்லாம் வதந்தி என்று கூற வேண்டிய அவசியம் என்ன?

கூட்டம் நடந்த கரூர் வேலுசாமிபுரம், கூட்டம் நடைபெறத் தகுதியான இடமா என்பதை விசாரிக்க, தி.மு.க. அரசே ஒரு ஆணையம் அமைத்துள்ள நிலையில், அதைக் குறித்து செந்தில் பாலாஜி பேச வேண்டிய அவசியம் என்ன? கருத்துத் திணிப்பு ஏற்படுத்துவதன் நோக்கம் என்ன என்ற கேள்விகள் எழுகின்றன.

யார் எங்கே சென்றார்கள், செல்லவில்லை என்று கேட்கும் தகுதி முதலில் தி.மு.கவிற்கு இருக்கிறதா? கள்ளக்குறிச்சியில், தி.மு.க. கள்ளச்சாராய வியாபாரிகளால் விற்கப்பட்ட கள்ளச்சாராயம், 66 உயிர்களைப் பலி கொண்ட போது அங்கு போகாத முதலமைச்சர், தென்மாவட்டங்கள் பெருமழையால் பாதிக்கப்பட்டபோது, அங்கு சென்று மக்களைச் சந்திக்காமல், இந்தி கூட்டணி உடன்பாடுகளுக்கு டெல்லி சென்ற முதலமைச்சர், தற்போது மட்டும் ஓடோடி வந்ததன் பின்னணியை மக்கள் அறிவார்கள்.

நீதிமன்றமும், விசாரணை ஆணையமும் விசாரணை நடத்திக் கொண்டிருக்கையில், முன்னாள் சாராய அமைச்சர் இத்தனை பதட்டப்படுவது தான் பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# நிவாரண பொருள்களுடன் காசாவை நெருங்கிய கிரெட்டா தன்பெர்க் படகை இடைமறித்த இஸ்ரேல்

காசாவுக்கு நிவாரண உதவிப் பொருள்களுடன் ஐரோப்பாவில் இருந்து சென்ற படகுகளை நடுக்கடலில் இஸ்ரேல் இடைமறித்தது. சுற்றுச் சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பெர்க் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் பலர் இந்தப் படகு பயணத்தில் இருந்தனர்.

பாலஸ்தீனத்தின் காசா பகுதி வாழ் மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவி பொருள்களுடன் பார்சிலோனாவில் இருந்து 50 படகுகளில் சுமார் 500 செயற்பாட்டர்கள் கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் பயணம் மேற்கொண்டனர். இந்தப் படகுகளில் சில புதன்கிழமை இரவு பாலஸ்தீன பிரதேசத்தை அடைந்தது. அப்போது அதனை இஸ்ரேல் கடற்படையினர் இடைமறித்துள்ளனர். இதில் சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரெட்டா தன்பெர்க் பயணித்த படகும் அடங்கும்.

இந்தப் படகு பயணத்தில் உள்ள சிரியஸ், அல்மா, அடாரா படகுகள் காசா கடற்கரையை நெருங்க சுமார் 80 மைல்கள் தொலைவு இருந்த நிலையில் இஸ்ரேல் கடற்படையினர் படகுகளை இடைமறித்துள்ளனர். அதை படகுகளில் பயணித்தவர்கள் சமூக வலைதள பதிவுகளில் பகிர்ந்து உறுதி செய்துள்ளனர்

அப்போது 'பாலஸ்தீனத்துக்கு விடு தலை வேண்டும்' என அவர்கள் முழங்கினர். ஏற்கெனவே இதே போல கடந்த ஜூன் மாதம் நிவாரண பொருள்களுடன் காசா நோக்கி வந்த படகுகளுக்கு இஸ்ரேல் அனுமதி மறுத்தது குறிப்பிடத்தக்கது.

"சுமார் 12 இற்கும் மேற்பட்ட படகுகளில் வந்த இஸ்ரேல் கடற்படையினர், பாலஸ்தீன கடல் பரப்பை நெருங்கிய எங்கள் படகுகளை இடைமறித்தனர். நாங்கள் பயணித்த படகுகளின் இயக்கத்தை நிறுத்துமாறு அவர்கள்



தெரிவித்தனர். அடுத்தகட்ட உத்தரவு வரும் வரை எங்களை காத்திருக்குமாறு கூறியுள்ளனர். இல்லையெனில் எங்களது படகுகள் கைப்பற்றப்படும் என கூறியுள்ளனர்.

மேலும், அதற்கான விளைவுகளை நாங்கள் எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என தெரிவித்துள்ளனர்" என்று காசாவுக்கு உதவு பொருட்களுடன் படகில் சென்ற அமெரிக்கர் கிரேக் ஸ்டாகர் தெரிவித்துள்ளார். இதை இன்ஸ்டாகிராமில் அவர் பகிர்ந்துள்ளார்.

இது தொடர்பாக இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கிரெட்டா தன்பெர்க் மற்றும் அவரது நண்பர்கள் பாதுகாப்பாக இருப்பதாக கூறியுள்ளார். அந்தப் பதிவில் படகின் மேல்புறத்தில் கிரெட்டா தன்பெர்க் அமர்ந்துள்ளார். இந்த பயணத்தில் நெல்சன் மண்டேலாவின் பேரனும் பயணித்துள்ளார். அவர்களுடன் ஐரோப்பியாவை சேர்ந்த செயற்பாட்டாளர்களும் உள்ளனர். சிவப்பு நிற லைஃப்-ஜாக்கெட்டை படகில் பயணித்த அனைவரும் அணிந்துள்ளனர்.

இஸ்ரேலின் நடவடிக்கை சில மணி நேரம் வரை தொடரும் என எதிர்பார்க்கிறோம். அவர்களது படகுகள் அனைத்தும் இஸ்ரேலின் அஸ்தோது நகரில் உள்ள துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்படலாம். பின்னர் அங்கிருந்து அவர்கள் நாடு கடத்தப்படலாம் என இத்தாலி வெளியுறவுத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் இந்த செயலுக்கு துருக்கி கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. சர்வதேச சட்டத்துக்கு எதிராக இஸ்ரேல் செயல்படுகிறது. நிவாரண உதவி பொருள்களுடன் படகுகளில் காசா சென்ற துருக்கி நாட்டினர் மற்றும் அவர்களுடன் உள்ளவர்களை உடனடியாக இஸ்ரேல் விடுவிக்க வேண்டும்.

அதற்கான நடவடிக்கையை நாங்கள் முன்னெடுத்துள்ளோம் என துருக்கியின் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் படகுகளில் பயணித்தவர்களின் நிலையை உன்னிப்பாக கவனித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்: கடந்த 2023 ஒக்டோபரில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்புக்கு இடையிலான மோதல் மிக தீவிரமானது. அதற்கடுத்த இந்த இரண்டு ஆண்டுகளில் இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக பாலஸ்தீனத்தை சேர்ந்த சுமார் ஆயிரக்கணக்கான காசா மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த சூழலில் பாலஸ்தீனியர்கள் அல் மவாசி பகுதிக்குப் பெயரும்படி இஸ்ரேல் படைகள் வலியுறுத்தி வருகின்றன. அங்கு மனிதாபிமான உதவிகள், மருத்துவ உதவிகள் கிடைக்கும் என்று வலியுறுத்துகின்றனர். இதுவரை காசாவில் இருந்து 4,50,000 இற்கும் அதிகமானோர் வெளியேறிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 13 தலிபான் அமைப்பினர் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை

பாகிஸ்தானில் 13 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவம் பாகிஸ்தானில் பலூசிஸ்தான் மாகாணத்தில் இடம் பெற்றுள்ளது.

பலூசிஸ்தானின் தலைநகர் குவேட்டாவில், தடை செய்யப்பட்ட தெஹ்ரிக் -இ -தலிபான் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளனர் என இராணுவத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, வெளியான தகவலின் அடிப்படையில் பாகிஸ்தான் இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.





அப்போது, அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகளுக்கும் மற்றும் பாகிஸ்தான் இராணுவத்துக்கும் இடையிலான துப்பாக்கிச்சூட்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதலில் 10 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, கெச் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் மூன்று பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அத்தோடு, கொல்லப்பட்ட பயங்கரவாதிகளிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

வியாழக்கிழமை | 02/10/2025

**அமெரிக்க பயணம் தொடர்பில் கனடா அரசு புதிய அறிவுறுத்தல்**




02▶



# 51 ஆவது மாகாணமாக இணையுமாறு கனடாவுக்கு ட்ரம்ப் மீண்டும் அழைப்பு

கனடா பிரதமர் பதவியிலிருந்து ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்து பதவி விலகிய போது அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக கனடா ஏன் மாறக் கூடாது என்று ட்ரம்ப் தெரிவித்த கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்தச் சமயத்தில் கனடா பிரதமர் பதவி விலகல் தொடர்பில் ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், கனடாவில் உள்ள பலர் தங்கள் நாடு அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக இருப்பதை விரும்புகிறார்கள்.

கனடா அமெரிக்காவின் தயவில்தான் இருக்கிறது. நாம் அவர்களுக்கு நிதி உதவி கொடுக்கிறோம். நிறையச் சலுகைகள் கொடுக்கிறோம். ஏற்றுமதி, இறக்குமதி வாய்ப்பு தருகிறோம். 02▶

# கனடாவில் காணாமல்போன சிறுவன்; ஒரு வாரமாக தொடரும் தேடுதல் பணி

கனடாவில் கடந்த ஒரு வாரமாக 6 வயது சிறுவன் ஒருவரை அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

தென் அல்பேர்ட்டா பகுதியில் இந்த சிறுவன் காணாமல் போயிருந்தார். ஆறு வயதான மாரியோஸ் மெக்டாகோல் என்ற சிறுவனே இவ்வாறு காணாமல் போயுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவனைத் தேடுவதற்கு மக்களும் அதிகாரிகளும் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சிறுவன் ஆட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறுவன் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் வழங்குமாறு பொதுமக்களிடம் குடும்பத்தினரும், அதிகாரிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக சிறுவனை தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# அமெரிக்க பயணம் தொடர்பில் கனடா அரசு புதிய அறிவுறுத்தல்

கனடா பிரஜைகள் அமெரிக்காவிற்கு மேற்கொள்ளக்கூடிய பயணங்கள் தொடர்பில் அரசு புதிய பயண அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

அதில், 'X' பாலினக் குறியீடு கொண்ட கனடியப் கடவுச்சீட்டு வைத்திருப்போர் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுக்குள் நுழையும்போது அல்லது இடைநிலையப் பயணத்தில் சிக்கல்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.




கனடா, தன்னை முழுமையாக ஆண் அல்லது பெண் என அடையாளப்படுத்தாத இருமமிலி non-binary குடிமக்களுக்கு 'X' குறியீடு கொண்ட கடவுச்சீட்டுக்களை வழங்குகிறது.

ஆனால், பல நாடுகள் மற்றும் விமான நிறுவனங்கள் இன்னும் 'X' பாலின அடையாளத்தை அங்கீகரிக்காததால், பயணிகள் 'ஆண்' அல்லது 'பெண்' குறியீட்டை வழங்க வேண்டிய அவசியம் ஏற்படலாம் என அறிவுறுத்தலில் கூறப்பட்டுள்ளது.

"பயணத்திற்கு முன், நீங்கள் செல்லும் நாட்டின் தூதரகம் அல்லது அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளிடம் தொடர்புகொண்டு தகவல் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்" என அறிவுறுத்தலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை, இருமமிலி non-binary மற்றும் பாலினச் சார்பற்ற கடவுச்சீட்டு அடையாளங்களைப் பற்றிய உலகளாவிய குழப்பங்கள் அதிகரித்துவரும் நிலையில் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில், டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற நாளே, கடவுச்சீட்டுக்களில் பாலினச் சார்பற்ற ('X') குறியீடுகளை நிறுத்தும் நிர்வாக உத்தரவை கையொப்பமிட்டார். இதன் பின்னர், அமெரிக்க வெளியுறவு துறை 'X' குறியீடு கொண்ட கடவுச்சீட்டுக்கள் வழங்குவதை நிறுத்தியது.

மேலும், பிறப்புச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பாலினத்தைத் தவிர்த்து கடவுச்சீட்டுக்களில் பாலின மாற்றம் செய்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது.

கடந்த செப்டம்பரில், ட்ரம்ப் நிர்வாகம், கடவுச்சீட்டில் ஆண் அல்லது பெண் பாலின குறியீடு மட்டும் இருக்க வேண்டும் என்ற கொள்கையை அமல்படுத்துவதற்காக அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தது.

# சைபர் குற்ற செயல்கள் தொடர்பில் க்யூபெக்கை சேர்ந்த 4 பேர் கைது

கனடாவின் கல்கரியில் சைபர் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒன்லைன் கடன் நிறுவனம் வாடிக்கையாளர்களை குறிவைத்து ஆயிரக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் மூலம் தொந்தரவு செய்ததாக க்யூபெக் மாநிலத்தைச் சேர்ந்த நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒரே நாளில் ஆயிரக்கணக்கான அழைப்புகள் வந்ததால் பாதிக்கப்பட்டவர்களின் தொலைபேசி இணைப்புகள் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.




2022 டிசம்பரில் Sonic Cash 500 என்ற ஒன்லைன் கடன் நிறுவனத்தின் வாடிக்கையாளர் ஒருவர் இந்தத் தாக்குதலுக்கு உள்ளானதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர், இன்னும் ஐந்து பேரும் இதேபோன்ற தாக்குதலுக்கு உள்ளானது தெரியவந்தது. பாதிப்படைந்தவர்களில் ஒருவரின் குடும்பம், நண்பர்கள், வேலை இடம், கல்கரி ஷாப்பிங் மால், மற்றும் மருத்துவ சோதனை மையம் போன்ற இடங்களும் தொந்தரவுக்கு உள்ளா கின.

2024 ஆம் ஆண்டு பெப்ரவரியில், லாவல் மற்றும் மொன்ட்ரியல் பகுதிகளில் உள்ள ஐந்து இடங்களில் பொலிஸார் சோதனை நடத்தியபோது, ஆயிரக்கணக்கான ஆவணங்கள் மற்றும் 200 இற்கும் மேற்பட்ட மின்னணு சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதன் மூலம் அந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. மிரட்டல் மற்றும் தொந்தரவு அழைப்புக்களை மேற்கொண்ட குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 51 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனி அப்படி எல்லாம் வழங்க முடியாது. ஜஸ்டின் ட்ரூடோ இதை அறிந்திருந்தார், இராஜினாமா செய்தார். கனடா அமெரிக்காவுடன் இணைந்தால், வரிகள் இருக்காது, வரிகள் வெகுவாகக் குறையும், மேலும் அவர்களைச் சுற்றித் தொடர்ந்து இருக்கும் ரஷ்ய மற்றும் சீனக் கப்பல்களின் அச்சுறுத்தலிலிருந்து அவர்கள் முற்றிலும் பாதுகாப்பாக இருப்பார்கள். ஒன்றாகச் சேர்ந்தால், அது எவ்வளவு சிறந்த தேசமாக இருக்கும்." என்று பதிவிட்டார்.

ட்ரம்பின் இந்தக் கருத்துக்கு கனடா அரசு கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில், நீங்கள் ஏன் அமெரிக்காவுடன் இணையக் கூடாது என்று கனடாவுக்கு ட்ரம்ப் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து பேசிய ட்ரம்ப், அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக கனடா இணைந்தால், Golden Dome எனும் வான் பாதுகாப்புத் திட்டம் கனடாவுக்கு இலவசமாகவே கிடைக்கும் என்று தெரிவித்தார்.



# கனடாவிற்கு நவீன ஆயுதங்களை விற்பனை செய்கிறது அமெரிக்கா

கனடாவிற்கு நவீன ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு அமெரிக்க அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

எறிகணை ரொக்கட் கட்டமைப்பு (M142 High Mobility Artillery Rocket Systems) மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களை கனடாவுக்கு விற்பனை செய்யும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு அமெரிக்க 1.75 பில்லியன் டொலர்கள் என அமெரிக்க பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் பாதுகாப்பு ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடா, இந்த ஒப்பந்தத்தின் கீழ் 26 ரொக்கட் கட்டமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்களை கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

இந்த விற்பனை அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்புத் திட்டங்களை வலுப்படுத்தும் அமெரிக்க பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், கனடாவின் இராணுவ திறனை மேம்படுத்துவதன் மூலம், நேட்டோ கூட்டணியில் ஐரோப்பாவில் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையில் வர்த்தக ரீதியான முரண்பாட்டு நிலைமைகள் மற்றும் கனடாவை 51ம் அமெரிக்க மாநிலமாக உள்வாங்குவதாக டிரம்ப் கருத்து வெளியிட்டு வரும் பின்னணியில் இந்த ஆயுதக் கொள்வனவு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.





